| நாள் | நேரம் | தலைப்பு | வேத பாடங்கள் | செய்தியளிப்பவர் |
|---|---|---|---|---|
| 01-02-2017 புதன் | காலை 5.30மணி | வாக்குதத்த ஆராதனை | - | அருள்திரு டேனியேல் செல்லதுரை ஆயர் |
| 05-02-2017 ஞாயிறு | காலை 8.30மணி | கிறிஸ்து வாழ்வின் கீதம் | யாத் 15:1 -21<br>லூக்க 8:26 - 39 | அருள்திரு டேனியேல் செல்லதுரை ஆயர் |
| 12-02-2017 ஞாயிறு | காலை 8.30மணி | **பார்வையற்றோர்க்கான நற்செய்தி** | | திரு. ஜெயசீலன் |
| 19-02-2017 ஞாயிறு | காலை 8.30மணி | வீழ்தலில் வன்முறை<br>படைப்பின் நோக்கம் | | திரு.A. ஜோசப் லேவீடர் |
| 26-02-2017 ஞாயிறு | மாலை 8.30மணி | லெந்து மாற்றுருவாக்கத்தின் நேரம் | ஏசாயா 44:21 - 28<br>யோ 2: 1 - 11 | திரு. ஐசையா பாஸ்கரன் |
| 01-03-2017 புதன் | காலை 5.30மணி | வாக்குதத்த ஆராதனை | - | அருள்திரு டேனியேல் செல்லதுரை ஆயர் |
| 01-03-2017 புதன் | மாலை 7.00மணி | சாம்பல் புதன்<br>திருவிருந்து ஆராதனை | - | அருள்திரு டேனியேல் செல்லதுரை ஆயர் |
| 03-03-2017 வெள்ளி | மாலை 7.00மணி | லெந்து வெள்ளி கிழமை | - | திரு பால்பன்னீர் செல்வம் |

## பிப்ரவரி மாதம் - 2017

# ஆயர்மடல்

அருமை திருச்சபை குடும்பத்திற்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாதம் ஆசீர்வாதமாக அமைவதற்கு இறைவன் அருள் புரிவாராக.

நமது திருச்சபையின் பல்வேறு எதிர்கால நலத்திட்டங்களை நினைத்து திருச்சபையின் வளர்ச்சியிலும் இறைமக்களின் ஆவிக்குரிய மறுமலர்ச்சியிலும் பூரணமாக வளர நம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு பரிசுத்த ஆவியானவர் நம்மில் செயல்பட ஆசீர்வாதத்தோடு நம்மை ஒப்புவிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஐக்கிய குழுக்களும் மற்ற சங்கங்களும் திருச்சபையினுடைய ஆவிக்குரிய அமைப்பு வளர்ச்சிக்கும் அமைப்பின் எதிர்கால திட்டங்களுக்கும் நீங்கள் உதாரத்துவத்தோடு ஈடுபடுவது மட்டுமல்ல, உங்கள் அனுதின ஜெபங்களில் தனித்தனியாக, குடும்பம் குடும்பமாக ஈடுபடுவது இன்றியமையாதது என்பதை ஆழ்ந்த அனுபவத்தோடு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். நமது திருச்சபையின் சேகர குழுவாக, திருச்சபையின் அமைப்புக்கும் எதிர்காலத்தின் முன்னேற்றத்திற்கும் ஆர்வத்தோடு சிந்தித்து தங்களை ஆதாரப்பூர்வாமான செயல்களில் ஈடுபட பரிந்துரை செய்யப்படுகிறது. வளர்ச்சிக்கு ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பமும், ஆத்துமாவும் ஜெப வாஞ்சையுடன் திருச்சபையின் மொத்த வளர்ச்சியில் ஆர்வத்தோடு ஈடுபட உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கடந்த மாதம் நடைபெற்ற நமது திருச்சபையின் ஊழியங்களில் திரளாய் பங்கு பெற்றதற்காக என்னுடைய நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதம் முழுவதும் நடைபெறும் ஊழியங்களில் அனைவரையும் ஈடுபடுத்தி கொள்ள அழைக்கப்படுகிறீர்கள். ஜெபியுங்கள், பங்கு பெறுங்கள், பகிர்ந்து கொடுங்கள், கடவுளின் ஆசி என்றென்றும் தங்குவதாக.

ஜனவரி மாதம் நடைபெற்ற சிறு பிள்ளைகளுக்கான கிறிஸ்மஸ் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறுவதற்கு உதவிய அனைவருக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டவரின் அருட்பணியில்

**Rev.Daniel Chelladurai**

# BIRTHDAYS IN THE MONTH OF FEBRUARY

| | | | |
|---|---|---|---|
| February 2 | Mr. T.M.Thomas | February 17 | Mrs. Mary Grace Angeline |
| February 3 | Dr. Evangeline Ronald Albert | | Mr.E.Arul Raj |
| February 5 | Mr.B.Manoj Samuel Aaron | February 18 | R.Kalaiyari |
| February 6 | Miss. Hannah Margaret | February 19 | Mr.D.Selvaraj |
| | Miss. S. Catherine | | Mr.N.Nova Manuel Raj |
| | Mrs. D. Jubilee Jane | | Anne Mary Nirmala |
| February 7 | Mrs.J.Enid Job | | Mr.Dinesh John Dawson |
| February 9 | Miss. Bency Amithah | | Mrs.Jasmine J. Nainita |
| February 10 | Mr. S. Barath | February 20 | Master. Philbert Manuel Raj |
| | Mr.G. Rajan | February 21 | Mrs. Kala Sundarakumar |
| February 11 | Mrs. Stella Raju | | Mrs.M.Shamala |
| February 12 | Mrs. Vijaya Manohar | February 22 | Mrs. Felishia David |
| | Mr. P. Selva Durai | | Mrs.R.Catherine Hilda |
| | Mrs. J.Merril Jemimah | February 23 | Mr. Sangeeth Paul |
| February 13 | Mrs.Shantha Douglas | February 24 | Miss.T.R.Evangeline Retna Grace |
| February 15 | Mrs.Christy Beulah | | Mrs.Charlet Selva Raj |
| | Mrs.Vinu Raja | | Master. Melstin Jeno |
| | Mr.D.Gibson Ebinezer | February 25 | Mr. D.Steve Rohan |
| | Mr.S.Gunasekaran | | Mr. J.Daniel Abraham |
| | Mrs. J. Glory Vitta bai | | Mrs. Sweetly Angelin |
| February 17 | Mrs. Jeba Rani | | Flowrence Sudhesh |
| | Mr.J. Paul Robinson Kennedy | February 27 | Mr.K.Selvan |
| | Mr.N.Selvamani | | Mr.R.Yacob |

# WEDDING DAYS IN FEBRUARY

| | |
|---|---|
| February 1 | Mr.R.Sudhesh Babu & Mrs. S.Sweetly Angelin Flowrence |
| | Mr.P. Jonathan Joseph & Mrs. J.Nancy Jennifer |
| February 2 | Mr.D.Samson Daniel & Mrs.Willice Jesentha |
| February 3 | Mr.T.T.Mathews & Mrs. Annie Chrisilda |
| February 4 | Mr.Sangeeth Paul & Mrs.Felicia Gladice |
| February 6 | Mr.J.Radha Krishnan & Mrs.R.Shantha Kumari |
| | Mr. G.Vigil Singh & Mrs. Beaultin Vigil |
| February 9 | Mr.P.Jeyaraj & Mrs.P.Kumari |
| | Mr.S.Alexander & Mrs.Priscilla Hepsibah |
| February 10 | Mr.M.Ravi & Mrs.P.Evalmona Metilda |
| February 12 | Mr.P.Parthiban Prasad & Mrs. Y. Sukhi |
| February 13 | Mr. A. Joseph & Mrs. Usha Joseph |
| February 15 | Mr.A.Gnanaraj & Mrs.V. Mary Syria Pushpam |
| | Mr.A.M. Ravi & Mrs. R.Santhosham |
| February 16 | Mr.G.S.Titus Prabhakaran & Mrs. P.Annie Patricia |
| February 19 | Mr.P.Amutharaj & Mrs. A. Kavitha Prescilla |

**பிறந்த நாள் மற்றும் திருமண நாள் கொண்டாடும் அனைவருக்கும் திருச்சபையின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்!**





# திருச்சபையும் - நற்செய்தி பணியும்

## H.A.கிருஷ்ணப் பிள்ளை



1827 - 1900

வைணவ குடும்பம், சிறந்த தமிழ் பண்டிதரின் மகனாகப் பிறந்தார் கிருஷ்ணப்பிள்ளை. சிறுவயதிலேயே வைணவ நூல்கள் அனைத்தையும் மணப்பாடமாகக் கற்றுத் தேறினார். வைணவ சமயத்தின் தீவிர பக்தனாய் மாறினார். கிருஷ்ணபிள்ளைக்கு தமிழ் மீது அதிக நாட்டம். இலக்கண சாஸ்திரங்கள் அனைத்தையும் எளிதாய் கற்று தமிழ் பண்டிதரானார்.

அச்சமயம், வேதாகமக் கல்லூரி ஒன்றிற்கு தமிழ் ஆசிரியர் தேவைப்பட்டதால் அங்கு தம் பணியை ஆரம்பித்தார். ஆனால் கிறிஸ்தவர்களிடம் தொடர்பு கொள்வதை அவர் விரும்பவே இல்லை.

ஒருநாள் ஹக்ஸ்டபிள் என்ற மிஷனெரி ஒரு புதிய ஏற்பாட்டை கிருஷ்ணப்பிள்ளைக்கு கொடுக்கவே, வெறுப்படைந்த அவர் தன் வேலையையும் விட்டுவிட்டார். ஆனாலும் மிஷனெரியின் அன்பு அவரை சிந்திக்க வைத்தது.

அந்நாட்களில் அநேக உயர்குல வாலிபர்கள் கிறிஸ்துவுக்காக தங்கள் இதயத்தைத் திறந்து கொடுத்தனர். அவர்களில் தனக்கோடி ராஜீ என்பவரும் ஒருவர். அவர் கிருஷ்ணப்பிள்ளைக்கு கிறிஸ்துவின் அன்பைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறினார்.

ஓர் இரவு, கிருஷ்ணப்பிள்ளையால் தூங்க முடியவில்லை. கிறிஸ்துவைக் குறித்த சிந்தனைகள் உள்ளத்தில் நிறைய ஆரம்பித்தது. இதயம் மெல்லத் திறந்தது. கிறிஸ்துவை தன் உள்ளத்தில் வரவழைத்தார். அவர் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை.

தமிழ் பண்டிதரான கிருஷ்ணபிள்ளை, கிறிஸ்துவைப் புகழ்ந்து பாடல்கள் எழுதவும், பாடவும் ஆரம்பித்தார். இரட்சண்ய யாத்ரீகம், இரட்சண்ய மனோகரம் என்ற அரிய நூல்கள் அவர் மூலமாக வெளிவந்தவையே. மாபெரும் மிஷனெரிகளான சர்ஜென்ட்., உவாக்கர் ஏமி கார்மைக்கேல் மற்றும் பலருக்கு தமிழ் கற்றுக் கொடுத்த இவர், 1900 ஆம் ஆண்டு பிப்ரவரி 3ஆம் தேதி என்றும் இறைவனை புகழ்ந்து பாட விண்ணகம் சென்றார்.

ஆண்டவர் என் இருதயத்தை திறந்தார் அவரைத் துதிக்க என் வாயைத் திறந்தேன்.

அண்டவரே ! நீர் தந்த வாழ்வில் நான் உம்மை துதிக்காமல் இருந்தால் எனக்கு நாவு இருந்தும் என்ன பயன்?

தொகுப்பு

**EVA. பால் பன்னீர் செல்வம்**

நன்றி : **வீரசுவாமி தாஸ்**

# கீதங்களை புரிந்து பாடலாமா?

<u>கிறிஸ்தவ கீதங்களின் வரலாறு</u>

## சீர்மிகு வான்புவி தேவா

**சங்கராபரணம்** **ஆதிதாளம்**

சீர்மிகு வான்புவி தேவா, தோத்ரம்,
சிரிஷ்டிப்பு யாவையும் படைத்தாய், தோத்ரம்,
ஏர்குணனே தோத்ரம், அடியர்க்–கு,
இரங்கிடுவாய், தோத்ரம், மா நேசா

நேர் மிகு அருள் திரு அன்பா தோத்ரம்,
நித்தமு முமக் கடியார்களின் தோத்ரம்,
ஆர் மணனே, தோத்ரம், உனது
அன்கினுக்கே தோத்ரம், மா நேசா,

ஜீவன், சுகம் பெலன், யாவுக்கும் தோத்ரம்,
தினம் தினம் அருள் நன்மைக்காகவும் தோத்ரம்,
ஆவலுடன் தோத்ரம், உனது
அன்பினுக்கே தோத்ரம், மா நேசா.

ஆத்துமா நன்மைகட்காகவும் தோத்ரம்,
அதிசய நடத்துதற்காகவும் தோத்ரம்
சாற்றுகிறோம் தோத்ரம், உனது
தகுமன்புக்கே தோத்ரம், மா நேசா.

மாறாப் பூரண நேசா, தோத்ரம்,
மகிழொடு ஜெபமொழி மாலையின் தோத்ரம்,
தாராய் துணை, தோத்ரம், இந்தத்
தருணமே கொடு, தோத்ரம், மா நேசா.

**ஆசிரியர் : அருள்திரு வே. மாசிலாமணி (1858 - 1932)**

ஆசிரியர் குறிப்பு : மதுரை – வத்தலக்குண்டு சிலுக்குவார்பட்டி கிராமத்தில் பிறந்ததார். இவரின் தந்தை வேதமுத்து ரோமன் சபையிலிருந்து சீர்திருத்தச் சபைக்கு மாறியதால் பல துண்பங்களை ஏற்றவர். இவரின் நான்கு ஆண் பிள்ளைகளும் போதகர்களாயினர், மாசிவாமணி ஐயரவர்கள் 1890 முதல் ஆற்காடு லூத்தரன் திருச்சபையில் திருவண்ணாமலை திருக்கோயிலூர் பகுதிகளில் ஆயராகவும், மதுரை அமெரிக்கன் மிஷினிலும் திருப்பணியாற்றினார், கீர்த்தனைக் கவிஞர்களான சந்தியாகு



ஐயர், பெஞ்சமின் ஐயர் அவர்களின் உடன் பிறப்பு. வயலின் இசைத்து சந்தைகளில் பாடி நற்செய்தியளிப்பார். உபதேசியார்களுக்குப் பயிற்சி அளிக்கும் பள்ளியில் பணியாற்றினார். இவரெழுதிய 10 கீர்த்தனைகள் சி.எல்.எஸ். நூலில் இடம் பெற்றுள்ளன, உதவி செய்தருளே ஒருவர்க்கொருவர் என்ற பாடல் ஆசிரிரப் பாமாலை நூலில் (346) உள்ளது. திருப்புவனம் எனும் சிற்றூரில் ஆயர் பணியாற்றியபோது தந்தானைத் துதிப்போமே என்ற கும்பிப் பாடலை எழுதியுள்ளார். 1932 இல் தம் தந்தை வேதமுத்துவை அடக்கம் செய்த திருவண்ணாமலை சாரோன் கல்லறைத் தோட்டதிலேயே அடக்கம் பண்ணப்பட்டுள்ளார்.

மெட்டு : திரிமுதல் கிருபாசனனே (2)

கண்ணி 1 : ( சீர்மிகு ) = சிறப்புமிக்க வானம், பூமி மற்று முள்ள சிருஷ்டிப்புகளைத்தும் படைத்தவரே, (தோத்ரம்) புகழ்ந்து போற்றுகிறேன், இது வணக்கத்திற்குரிய மொழி என முனைவர் டேவிட் பிரபாகர் தம் “கிறிஸ்தவக் கீர்த்தனைக் களஞ்சியத்தில்” கூறுகிறார் (ஏர்) = நல்ல குணமுடையோனே, பக்தர்களுக்கு இரக்கம் செய்கிறவர் எனப் புகழ்கிறார்.

கண்ணி 2 : (நேர்மிகு) நேர்மையுள்ள, அன்பும் அருளும் உடைய உமக்கு (நித்தமும்) எப்போதும் (அடியார்கள்) – பக்தர்கள் தோத்திரம் செய்கிறார்கள். (ஆர்) அழகுடைய (மணனே மணாளனே எருசலை மாதாகிய திருச்சபையை மணக்க வந்தவரே (மா நேசா) மிகுந்த அன்புடையோனே.

கண்ணி 3 : இறைவன் தரும் உயிர், உடல் நலம், பெலன் மற்றும் அருளும் அனுதின வாழ்க்கைத் தேவைகளுக்காக ( ஆவலுடன் ) – முழு மனதுடன், ஆர்வமுடன் தோத்திரம், இவை ஒன்றுமில்லை யாயினும், பாவிகளான நம்மீது வைத்துள்ள அன்பினுக்கே தோத்திரம் செய்ய வேண்டும்.

கண்ணி 4 : பக்தி வாழ்க்கையில் வாழ உதவும் அவர் அருள் அன்புக்காக தோத்திரம்.

கண்ணி 5. தவறு செய்தாலும் அதற்காகத் தமது அன்பை (மாறா) மாற்றது ( பூரண ) முழுமையான அன்பை வெளிப்படுத்துவதற்காக தோத்திரமாகிய ஜெபமாலை அணிவிக்க ( தருணம் ) இப்போதே ( தாராய் ) கொடுத்திடும் உம் உதவியை மாநேசா என்கிறார்.

குறிப்பு: சரணங்களின் முதலிரண்டடிகளும் தோத்திரம் எனவும் ஈற்றடி இறுதி சொல் மாநேசா என்றும், வரிக்கொன்றாக 20 தோத்திரங்கள் அமைத்துள்ளார்.

**- Nishada's**

ஆதாரம்: CLS Publications

# வேத வினா - விடை போட்டி

## பிப்ரவரி மாத கேள்விகள்

**( வசன ஆதாரம் தரவும் )**

1. யூரோக்கிலிதான் என்பது என்ன?
2. அப்பொல்லோ என்பவர் யார்?
3. மோளோக் என்பது யார்?
4. பர்னபா என்பது யார்?
5. II கொரி 8: 14 இதோ வசனத்தை (ஏறக்குறைய) பழைய ஏற்பாட்டில் எங்கு பார்க்கிறோம்.
6. தேவன் யாருக்கு தயவு காட்டமாட்டார்?
7. தன் சரீரத்தில் பவுல் எதைத் தரித்துக் கொண்டிருந்தார்.
8. 50/50 = 45 / 50 = 40 / 50 = 30 / 50 = 20 /50 = 10 /50 = 4-1 = 3
   (பழைய ஏற்பாடு)
9. 100 = 50, 100 = 80 (புதிய ஏற்பாடு)
10. பூர்த்தி செய்க: ................................ மிகுந்த .................................
    நான் கர்த்தரை சேவித்தேன்

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 20-02-2017**

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி

**C.S.I. இயேசுவில் புதுவாழ்வு ஆலயம்**
எண் 55, 3வது மனை பிரிவு,
ஆசிரியர் குடியிருப்பு,
லட்சுமிபுரம், சென்னை – 600 099.

குறிப்பு: தெளிவான முகவரியுடன்
சந்தா எண்ணையும் சேர்த்து எழுதி அனுப்பவும்

csinewlifeinjesus@gmail.com 9444 633129
**www.csinewlifeinjesus.org**

## வாழ்த்துகிறோம்!

திருமதி மெரோலின் ஆல்பர்ட் அவர்களின் மகள்

**செல்வி. டாக்டர் இவாஞ்சலின் - ஜெட்சன் எடின்பெரோ**

இவர்களின் திருமணம் 12.01.2017 அன்று சிறப்பாக நடைபெற்றது.
திருச்சபையராக இவர்கள் குடும்ப வாழ்வு சிறப்பாக அமைய வாழ்த்துகிறோம்.



# சென்ற மாத போட்டியின் விடைகள்

| | | |
|---|---|---|
| 1. | யூதாவின் அதிபதி | ஏஸ்றா 1:8 |
| 2. | விசாரிப்புக்காரன் | நெகேமியா 11:22 |
| 3. | திராட்சரசம் | ஏரேமியா 35 35 |
| 4. | ஊழியக்காரன் | சங்கீதம் 31:16 |
| 5. | சூகான் | I நாளா 7:32 |
| 6. | கானானை வேவு பார்க்க | எண் 13:12 |
| 7. | பெத்ஷிமேஸ் | Iசாமுவேல் 6.13,14 |
| 8. | திராட்சக் குலை | எண் 13:24 |
| 9. | வானங்கள் | சங்கீதம் 8:3 |
| 10. | நிறம் | ஏசேக்கியேல் 1:4 |

## சரியான விடை எழுதியவர்கள்

1. திருமதி. எஸ்தர் சந்தோஷ்ராஜ்
2. திருமதி. கலா சுந்தரகுமார்
3. திருமதி. ஜாய்ஸி விமலா
4. திருமதி. லீலா டிக்சன்
5. திருமதி. ஜூபிலி தர்மராஜ்
6. திருமதி. ஸ்விட்டிலீன் ரிச்சர்ட்
7. திருமதி. ரோஸ்லெட் செல்லன்
8. திருமதி. கீதா ஹென்றி
9. திருமதி மெரில் ஜஸ்டின்

**படித்ததில் பிடித்தது**

## BIGGEST BRAIN DAMAGING HABITS

1. Missing breakfast
2. Sleeping Late
3. High Sugar consumption
4. More Sleeping Specially at morning
5. Eating meal while watching TV or Computer
6. Habit of blocking / Stopping Urine

**Health is first, Wealth is next**

**A.Joseph**

# விவிலியத்தின் பழமொழிகள்

| | | |
|---|---|---|
| 1. | மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல.... கடவுளின் | மத் 4:4 |
| 2. | பார்வையற்ற ஒருவர் வழிநடத்தினால் | மத் 4:4 |
| 3. | பிளவுபடும் எந்த நகரமும் வீடும் நிலைத்து நிற்காது | மத் 12:25 |
| 4. | மாடி வீட்டில் நச்சரிக்கும் மனைவியோடு வாழ்வதை விட | நீதி 21: 9 |
| 5. | போலி இறைவாக்கினர் | மத் 24:24 |
| 6. | ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது | மத் 19: 24 |
| 7. | கடைசியானோர் முதன்மையாவர் | மத் 20 16 |
| 8. | கட்டுவோர் புறக்கணித்த கல்லே | மத் 21:42 |
| 9. | தம்மைத் தாமே உயர்த்துகிறவர்கள் எவரும் தாழ்த்தப் பெறுவர் | மத் 23: 12 |
| 10. | உள்ளவர் எவருக்கும் கொடுக்கப்படும் | மத் 25 : 29 |
| 11. | பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் கடும் | மத் 24:27 |
| 12 | உங்கள் முத்துக்களை பன்றிகள் முன் எறிய வேண்டாம் | மத் 7: 6 |
| 13 | மலைமேல் இருக்கிற நகர் மறைவாயிருக்க முடியாது | மத் 5:14 |
| 14 | கண்தான் உடலுக்கு விளக்கு | மத் 6: 22 |
| 15. | எங்கே இறைவெளிப்பாடு இல்லையோ.. திரிவார்கள் | நீதி 29:18 |
| 16. | கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்ய முடியாது | மத்: 6: 24 |
| 17. | இறந்தோரைப் பற்றி கவலை வேண்டாம் | மத் 8:22 |
| 18. | மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் | லூக் 12:15 |
| 19. | வெளித்தோற்றத்தின்படி தீர்ப்பளியாதீர்கள் | யோவான் 7:24 |
| 20. | தீயோர்க்கு அமைதியில்லை | ஏசாயா 48:22 |



| | | |
|---|---|---|
| 21. | கனிவான மறுமொழி கடுஞ்சினத்தையும் ஆற்றிவிடும் | நீதி 15:1 |
| 22. | ஒவ்வொன்றுக்கும் ஒரு நேரமுண்டு | சபை உரை 3:1 |
| 23. | தரையில் சிந்தப்பட்டு.... சேர்க்க முடியாத நீரைப்... | 2 சாமு 14:14 |
| 24. | மணியும் பவளமும் அதற்கு நிகரல்ல | யோபு : 28:18 |
| 25. | கலைமான்.. தவிப்பது போல் தவிக்கின்றது | திருப்பாடல் 42:1 |
| 26. | அவன் பேச்சு வெண்ணெயிலும் மிருதுவானது | திருப்பாடல் 55:21 |
| 27. | கண்ணீரோடு விதைப்பவர்கள் | திருப்பாடல் 126:5 |
| 28. | சோம்பேறிகளே எறும்பைப்பாறுங்கள் | நீதி 6:6 |
| 29. | மரக்கறி உணவே மேல் | நீதி 15 : 17 |
| 30. | சிறுதொகையும்.. அச்சமும் இருப்பதே மேல் | நீதி 15 :17 |
| 31. | அளவின்றி செலவழிப்போர் செல்வராவதுமுண்டு | நீதி 11 : 24 |
| 32. | இன் சொற்கள் தேன் கூடு போன்றவைகள் | நீதி 16 : 24 |
| 33. | பொறுமை உடையவரே மேலானவர் | நீதி 16 : 32 |
| 34. | மகிழ்வார்ந்த உள்ளம் நலமளிக்கும் மருந்து | நீதி 17 : 22 |
| 35. | பேசாதிருந்தால் மூடனும் ஞானமுள்ளவன் | நீதி 17 : 28 |
| 36. | திராட்சை இரசம் ஒழுங்கீனத்தைத் தோற்றுவிக்கும் | நீதி 20: 1 |
| 37. | நல்வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்கு | நீதி 22: 6 |
| 38. | ஞானமுள்ளவரோ பொறுமையோடிருப்பதால்.. | நீதி 29 : 11 |
| 39. | பச்சை மரத்துக்கே இவ்வாறு செய்கிறார்கள் என்றால்.. | லூக்கா 23:31 |
| 40. | பெற்றுக் கொள்வதை விட கொடுத்தலே.. | திருத்தூதர் 20:35 |

தொகுப்பு: **ஆசிரியர்**
சிலுவை பயணம் என்ற புத்தகத்திலிருந்து

# கருத்து வேறுபாடு

இருபத்தைந்தாவது திருமண ஆண்டைக் கொண்டாடிய ஒரு தம்பதியினர், தங்களின் இருபத்தைந்தாண்டு கால திருமண வாழ்வில் ஒரு சிறு கருத்து வேறுபாடுகூட தங்கள் நடுவில் ஏற்பட்டதில்லை என்று பெருமையாகக் கூறினார்கள். கேட்பதற்கு இது ஒரு நல்ல சாட்சிகள்தான் ஆனால் இருவருக்கிடையில் அனைத்து விஷயங்களிலும் கருத்து வேறுபாடில்லாமல் இருந்திருந்தால் அங்கே தவறு இருப்பதற்கு வாய்ப்புண்டு.

ஏனென்றால் யாருடைய கருத்துக்களும் நடவடிக்கைகளும், செயல்முறைகளும் நூறு சதவீதம் சரியானவைகளாக இருக்க வாய்ப்பில்லை. எனவே அங்கே சில கருத்துகள் தவறானதாகவும், குறையுடையதாகவும் இருக்க முடியும். அவைகளுக்கு எந்த எதிர்ப்பும் விமர்சனமும் எழும்பவில்லையென்றால். அங்கே எதிர்கருத்துக்கு இடமில்லையென்றோ அல்லது எல்லாம் கண்ணை மூடிக்கொண்டு ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்றுதான் ஊகிக்க முடியும்.

ஒரு குடும்பமாக இருந்தாலும், குழுவாக இருந்தாலும் சபையாக இருந்தாலும், உறவாக இருந்தாலும் அங்கே ஒற்றுடையுணர்வும், ஒத்து செயல்படும் பண்பும் தேவையென்றாலும் கருத்துக்களில் செயல்களில் முடிவுகளில் உள்ள குறைபாடுகள் கவனிக்கப்படாமலும், கண்டு கொள்ளப்படாமலும் போவது நல்லதல்ல.

ஆகாப் பொல்லாத ஏசபேலின் எல்லா நடவடிக்கைகளுக்கும் இசைந்து போனான். கருத்தொற்றுமை இருந்தது. அதுவே இருவரின் அழிவுக்கும் அடிப்படையாகயிருந்தது. அனனியா – சப்பிராள் தம்பதியினர் காணிக்கை விஷயத்தில் எடுத்த முறைகேடான முடிவில் கருத்தொருமித்து இசைந்து நின்றார்கள் முடிவு, இருவரும் பரிதாபமாக அழிந்தார்கள்.

பல குடும்பங்களிலே கணவனின் தவறான போக்குகளில் மனைவி கருத்து வேறுபடுவதில்லை. பல குடும்பங்களில் கணவர்களின் எந்தக் கொள்கைக்கும் எதிராக கருத்து தெரிவிக்க மனைவிகள் அனுமதிக்கப்படுவதில்லை. பல கணவர்கள் மனைவிகள் தங்களுக்குள் பிரச்சனைகள் வராதிருக்க வேண்டும் என்பதற்காக, பிறருக்குக் கேடு உருவாக்கும் பல காரியங்களில் ஒருவருக் கொருவர் கருத்து வேற்றுமையின்றி நிற்பார்கள்.

இதுபோன்று நிலமைகள் சபைகளிலும், ஐக்கியங்களிலும் ஊழியங்களிலும், குழுக்களிலும் காணப்படுகிறது. தவறான காரியங்களில் கருத்து வேறுபாடின்றி இருப்பதன் பெயர் ஒற்றுமையல்ல. உண்மையை புறந்தள்ளிவிட்டு, ஒற்றுமையை காப்பது ஏற்கத்தக்கதல்ல. அது தீமைக்கேதுவானது. தேவையான சூழ்நிலைகளில் கருத்தில் வேறுபடுவதும், அப்படி வேறுபடுகிறவரின் கருத்தைக் கேட்பதும் மிக அவசியமானவையே.

- திருமதி . **உஷா ஜோசப்**



# அலைபேசி வார்த்தைகளில் நம் வாழ்க்கை

| | | |
|---|---|---|
| சோகத்தை | Delete | செய்யுங்க |
| சந்தோஷத்தை | Save | செய்யுங்க |
| சொந்தங்களை | Recharge | செய்யுங்க |
| நட்புகளை | Download | செய்யுங்க |
| எதிரிகளை | Erase | செய்யுங்க |
| உண்மையை | Broadcast | செய்யுங்க |
| துக்கத்தை | Switch off | செய்யுங்க |
| வேதனையை | Not Rechargable | செய்யுங்க |
| பாசத்தை | Incoming | செய்யுங்க |
| வெறுப்பை | Out going | செய்யுங்க |
| சிரிப்பை | Inbox | செய்யுங்க |
| அழுகையை | Outbox | செய்யுங்க |
| கோபத்தை | Hold | செய்யுங்க |
| இன்முகத்தை | Send | செய்யுங்க |
| உதவியை | OK | செய்யுங்க |
| இதயத்தை | Vibrate | செய்யுங்க |

**பிறகு பாருங்கள் வாழ்க்கை என்றும்**
**சந்தோஷமாக ஒலிக்கும்**